

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொளப்பாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பில் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 2,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை வழங்கினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி குழு ஒன்றிய தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், முனு.ஆதித்தியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (30.01.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தின் இறுதிக்கட்டப் பணிகளை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரருக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார். இந்த ஆய்வின்போது சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் /முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ். மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் எ.நாகராஜன், திருமதி.அமுதா, திருமதி.யோகபிரியா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப். முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சட்டமன்றத் தேர்தலில் கழகத்திற்கு 45% வாக்குகள் கிடைக்கும் என்பதே கூட மிகக் குறைவான கணிப்புதான் என்பதை

# திராவிட மாடல் ஆட்சி 2.0 விற்கு மகுடம் சூட்டப் போகும் பெண்கள் நிரூபிப்பார்கள்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு உறுதி!



சென்னை, ஜன. 31–

45% வாக்குகளுடன் தொட முடியாத முதலிடத்தில் தி.மு.க. கூட்டணி உள்ளது என இந்தியா டுடே – சிவோட்டர்ஸ் சர்வே வெளிப்படுத்தியுள்ளது என்று பெண்களின் இதயங்களை வெல்லும் போட்டியில், தி.மு.க. முன்னணி என டெக்கான் க்ரானிக்கலின் கணிப்பு வெளியாகியுள்ளது என்றும் 45% என்பதே கூட மிகக் குறைவான கணிப்புதான் என்பதை திராவிட மாடல் 2.0விற்கு மகுடம் சூட்ட போகும் பெண்கள் நிரூபிப்பார்கள் என்றும் கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:–

சட்டமன்றத் தேர்தல் குறித்து நிகழ்த்தப்படும் ஒவ்வொரு ஆய்வும், கருத்துக் கணிப்புகளும் திராவிட மாடல் ஆட்சியை மீண்டும் நிறுவ மக்கள் உறுதியெடுத்துவிட்டதை காட்டுகின்றன. நேற்று டெக்கான் க்ரானிகல் பத்திரிகை எழுதியிருந்த ஆய்வு கட்டுரையும், இந்தியா டுடே வெளியிட்ட கருத்துக் கணிப்பும் அதனை மெய்ப் பிக்கின்றன.

'பெண்களின் இதயங்களை வெல்லும் போட்டியில், திமுக முன்னணியில் உள்ளது' (In race to win hearts of women, DMK is ahead a) என தலைப்பிட்டு டெக்கான் க்ரானிகல் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதில், சிறுபான்மையினர் மத்தியில் அதிமுகவின் அங்கீகாரம் சரிந்துள்ளது என்றும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி 70 முதல் 80 சதவீத சிறுபான்மையினர் வாக்குகளைப் பெற்று கூட்டணி யின் வெற்றியை உறுதி செய்யும் என்று சமூகவியலாளர்கள் கருதுகின்றனர் என தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியா டுடே பத்திரிகையும் சிவோட்டர்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகியிருக்கிறது. திமுகவின் கூட்டணிக் கட்சிகள் இடம்பெற்றிருக்கும் இந்தியா கூட்டணி 45 சதவிகித ஆதரவோடு முன்னிலையில் இருக்கிறது என இந்தியா டுடே சி வோட்டர்ஸ் தெரிவித்திருக்கிறது. அதிமுக இடம்பெற்றிருக்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 33 சதவிகித ஆதரவுதான் இருக்கிறது. வித்தியாசம் 12% என்பதால் தொட முடியாத உயரத்தில் தி.மு.க. கூட்டணியை மக்கள் உயர்த்திப்பிடிக்கின்றனர்.

முதலமைச்சரின் தலைமையில் 2019 நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி தொடர்ச்சியாக எல்லா தேர்தல்களிலும் வெற்றி பெறும் கூட்டணியாக திமுக அணி இருக்கிறது.

2026 தேர்தலிலும் திமுக வெல்லும். அதனை கருத்துக் கணிப்புகளும் உறுதி செய்கின்றன.

தமிழ்நாட்டு மக்களின் குறிப்பாக பெண்களின் நம்பிக்கையையும் பேராதரவையும் பெற்று அசைக்க முடியாத அரசாக விளங்குகிறது திராவிட மாடல் அரசு! திராவிட மாடல் 2.0 மீண்டும் அமைக்க தமிழ்நாட்டின் பெரும்பான்மை பெண்கள் முடிவெடுத்து விட்டார்கள்! தமிழ்நாட்டில் இருக்கும் மூன்று கோடிக்கும் மேற்பட்ட பெண்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்று 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக அடையப் போகும் வரலாற்று வெற்றியில் பெண்களுக்கு முக்கிய பங்கு இருக்கும்.

தமிழ்நாட்டுப் பெண்களின் உரிமைகளுக்காக அவர்களின் சமூக மேம்பாட்டிற்காக திராவிட மாடல் அரசு அக்கறையோடு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தில் ஏறக்குறைய 1.30 கோடி குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகின்றனர். அரசு நகர பேருந்துகளில் அனைத்துப் பெண்களுக்கும் 'விடியல் பயணம்' மூலம் உத்வேகத்தையும் பொருளாதார சேமிப்பையும் உறுதிப்படுத்தியிருப்பவர் முதலமைச்சர் அவர்கள். இதுவரை 800 கோடி பயணங்களுக்கும் மேல் பெண்களால் மேற்கொள்ளப்பட்டிருப்பதே இத்திட்டத்தை தமிழ்நாட்டுப் பெண்கள் எவ்வளவு தூரம் வரவேற்றிருக்கிறார்கள் என்பதற்குச் சான்று.

பெண்களின் முன்னேற்றத்திற்கான தடைகள் எங்கிருந்தாலும் அதை ஒழித்து, அவர்களது முன்னேற்றப்பாதையைச் செழுமைப்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்களைத் திராவிட மாடல் அரசு தீட்டியிருக்கிறது. புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் பெண்கள் கல்வி கற்க பொருளாதாரம் ஒரு தடையாக இருக்க முடியாது என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறது. இத்திட்டம் மூலம் இதுவரை 6.95 இலட்சம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாயை வழங்கி வருகிறது தமிழ்நாடு அரசு.

பெண்களின் திறன்களும் உழைப்பாற்றலும் படைப்பாற்றலும் கிராமங்களில் முடங்கி விடக்கூடாது அவர்கள் நகரங்களுக்கு வந்து, தங்களையும் உயர்த்தி தமிழ்நாட்டையும் உயர்த்த வேண்டும் எனும் நோக்கத்தோடு அதீத பாதுகாப்போடு உயர்தர தோழி விடுதிகளை அமைத்திருக்கிறது.

பணிக்குச் செல்லும் குடும்பப் பெண்கள் பள்ளிக்குச் செல்லும் தங்கள் குழந்தைகளுக்கு முறையான ஊட்டச்சத்துள்ள காலை உணவு கிடைக்காமல் போய்விடுகிறேதே என்றிருந்த கவலையைத் தீர்த்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு சுவையான சத்தான காலை உணவுத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். இத்திட்டத்தின் மூலம் 20 இலட்சம் மாணவர்கள் தினமும் பயன் பெறுகின்றனர்.

இன்றைக்கு பெண்களின் நலனிலும் வளர்ச்சியிலும் அக்கறை உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களுக்குக் கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க 9 முதல் 14 வயதுடைய, சுமார் 3.39 இலட்சம் சிறுமிகளுக்கு விலையில்லா தடுப்பூசி போடும் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின்.

பெண்களின் வாழ்வாதாரத்தில் மட்டுமல்ல அவர்களின் ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்டு கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்தி கொண்டிருக்கிறது தி.மு.க. அரசு.

பெண்களை ஆதிக்கம் செய்ய நினைப்பவர்கள், துன்புறுத்த நினைப்ப வர்களை கடுமையாக தண்டிக்கத் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்பு (திருத்தச்) சட்டத்தை கொண்டு வந்தவரும் நமது முதலமைச்சர்தான்.

பெண்களை முன்னேற்று திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடுதான் இருக்கிறது. இது போன்றத் திட்டங்கள் பெண்கள் வாழ்வில் ஏற்படுத்திவரும் மறுமலர்ச்சியை கண்டு வயிற்றெரிச்சலில் திரிபவர்கள், உண்மை களை ஜீரணிக்க முடியாமல், அவதூறுகளை நாள்தோறும் அள்ளிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதனையெல்லாம் தமிழ்நாட்டுப் பெண்கள் பொருட்படுத்துவதில்லை. தங்களுக்காக உழைக்கின்ற, தங்களுக்காக திட்டங்களை உள்ளன்போடு, உயர்த்தும் நோக்கத்தோடு செயல்படுத்தும் திராவிட மாடல் அரசே தொடர வேண்டும் எனும் தமிழ்நாட்டின் பெரும்பான்மை பெண்கள் முடிவெடுத்து விட்டார்கள்.

45% என்பதே கூட மிகக் குறைவான கணக்குதான் என்பதை 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக அடையப் போகும் வரலாற்று வெற்றி நிரூபிக்கும். அதற்கு திமுக ஆட்சியில் பயன்பெறும் பெண்கள் தான் மகுடம் சூட்டு வார்கள்!

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### சின்னசேலம் வட்டம், அனுமனந்தல் கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.31-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், அனுமனந்தல் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், அனுமனந்தல் கிராமத்தைச் சேர்ந்த புகழேந்தி (வயது 27) த/பெ. ஆறுமுகம், மின்சாரம் சார்ந்த பணிகளை செய்து வந்த நிலையில் நேற்று (29.01.2026) காலை சுமார் 9.30 மணியளவில் அனுமனந்தல் கிராமம், சன்னாசி கோவில் தெருவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான வீட்டில் சுவரை துளையிடும் கருவி மூலம் துளையிட்டுக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் கெருகம்பாக்கம் – அய்யப்பன்தாங்கல் ஊராட்சிகளில்

# திராவிட பொங்கலையொட்டி நலத்திட்ட உதவிகள் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்!

## படப்பை ஆ.மனோகரன், சீ.பத்மப்பிரியா பங்கேற்பு! ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

*காஞ்சிபுரம், ஜன.31-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் கெருகம்பாக்கம் ஊராட்சி மற்றும் அய்யப்பன்தாங்கல் ஊராட்சிகளில் திராவிட பொங்கலை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (31.1.2026 சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் கெருகம்பாக்கம் ஊராட்சி ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ. வந்தேமாதரம் தலைமையில் கே. வசீகரன், சுரேஷ்பாபு, வெ. கவிபாரதி, இமான் கௌதமன் வரவேற்புரையில்*

*அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் மாலை 06.00 மணியளவில் இ.வி.பி. பிரபு அவென்யூல் ஊராட்சி மன்ற தலைவர் ஜெமிலா பாண்டுரங்கன் வரவேற்புரையிலும் உஷாநந்தினி எத்திராஜ், லோகநாயகி சாமிநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ், எஸ்.சந்தானம், பொன். ஜீவா, எஸ்.ராஜாதேசிங்கு, டி.எஸ்.எம்.ஜெயகரன், டி. ஆர்.சாரதி பெரிய நாயகம், சுலைமான் சையத், எஸ். ஜனார்த்தனன் முன்னிலையிலும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான தா. மோ. அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்டங்களை வழங்க உள்ளார்.*

*இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சீ.பத்மபிரியா, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தே மாதரம், ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பூங்கொடி அரச, எஸ்.சந்தானம், பா.ராஜேந்திரன், எஸ். கே.துளசிங்கம், மாவட்ட அணியின் நிர்வாகிகள் தி.க. பாஸ்கரன், ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ் உள்ளிட்ட அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.*

*எனவே குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிளைக் கழக நிர்வாகிகளும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி சேர்ந்த நிர்வாகிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### எழுத்தாளர் சூர்யா சேவியர் எழுதி முதல்வரால் வெளியிடப்பட்ட

# திருப்பரங்குன்றம் முழு வரலாற்று ஆய்வு நூல் அறிமுக விழா!

## தாயகம்கவி எம்.எல்.ஏ. சிறப்புரை! மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. தலைமை!

*சென்னை, ஜன.31*

*எழுத்தாளர் சூர்யா சேவியர் எழுதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்ட திருப்பரங்குன்றம் முழு வரலாற்று ஆய்வு நூல் அறிமுக விழா இன்று (31.01.2026 சனிக்கிழமை) மாலை 5.00மணிக்கு நேருஜி கலையரங்கம், சித்த மருத்துவ கல்லூரி அருகில், பாளையங்கோட்டையில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் தலைமையில் நடைபெறுகிறது.*

*இதில் பா.வில்சன் மணி துரை எம்.சி., வரவேற்புரையில் மேனாள் சபாநாயகர் வழக்கறிஞர் இரா.ஆவுடையப்பன், கல்வியாளர் கிரகாம்பெல், நெல்லை மாநகராட்சி மேயர் கோ. இராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, பாளையங்கோட்டை மண்டல சேர்மன் மா.பிரான்சிஸ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இதில் கழக துணை அமைப்புச் செயலாளர் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம்கவி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.*

*மேலும் இந்த நிகழ்வில் பாலபிரஜாபதி அடிகளார், எழுத்தாளர் திரைப்பட இயக்குனர் டாக்டர்.பாரதி கிருஷ்ணகுமார், மதிமுக மாநில துணைப் பொதுச்செயலாளர் தி.மு.இராஜேந்திரன், மாநிலத் தலைவர் SDPI நெல்லை முபாரக், சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை வழக்கறிஞர் வாஞ்சிநாதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். எழுத்தாளர் சூர்யா சேவியர் நூல் ஆசிரியர் ஏற்புரை ஆற்றுகிறார். 54வது வார்டு நெல்லை மாமன்ற உறுப்பினர் கே.கே.கருப்பசாமி கோட்டையப்பன் நன்றி கூறுகிறார். நெறியாள்கை : பேராசிரியை இரா. உமா தேவி தமிழ்த்துறை தலைவர், இராணி அண்ணா கல்லூரி, நெல்லை.*

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வருகிற 05.02.2026 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் அடுத்த கீழம்பி, A.J.S. மகாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி., மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் - கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா
2. வெல்லும் தமிழ்பெண்கள் மகளிர் தேர்தல் பரப்புரை.
3. பிப்-11, திருவிடந்தையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி BLA2, BDA, BLC, கூட்டத்தில் பங்கேற்பது.
4. பிப்-14, சென்னையில் தேர்தல் அறிக்கை சம்மந்தமாக கூட்டத்தில் பங்கேற்பது.
5. தமிழ்நாடு தலைகுனியாது பிப்-16, 17, 18, சட்டமன்ற தொகுதி வாரியாக தேர்தல் பரப்புரை.
6. கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி டி.டி.கே. நகரில் டாக்டர் கலைஞர் விளையாட்டு மைதானம் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் திட்டத்தின் கீழ் ரூ.3,கோடி செலவில் புதியதாக கட்டபட்டு வரும் விளையாட்டு மைதானம் மற்றும் அரங்குகள் அமைக்கும் பணிகளை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வேப்பம்பட்டு பகுதியில் 10,500 மின் இணைப்புகளை பிரித்து புதிதாக பிரிவு அலுவலகத்தை சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த், மேற்பார்வை பொறியாளர் அ.சேகர், செயற்பொறியாளர் பாலமுருகன். ஒன்றிய நிர்வாகிகள் இ.என்.சேகர், ராஜா, ரமேஷ், மின்சார துறை அதிகாரிகள் ஜீவானந்தம், டாக்டர் பாலச்சந்திரன், இந்திரா பிரியதர்ஷினி, கிருஷ்ணமூர்த்தி, தமிழரசன், லீலாவதி, சுப்பிரமணி, சதீஷ்குமார், சுரேகா, போர்மேன் ரவிச்சந்திரன், வயர்மேன் ஜெகதீஸ்வரன், உள்பட திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஊத்துக்குளி பேரூர்க் கழகப் பொருளாளர்

# கழக முன்னோடி சி.பி.செல்வராஜ் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.31

ஊத்துக்குளி பேரூர்க் கழகப் பொருளாளரும், கழக முன்னோடி சடையப்ப நாடார் அவர்களின் புதல்வரும் யு.எஸ். நவீன் குமார், யு.எஸ்.ரகுநாத் ஆகியோரின் தந்தையுமான சி.பி. செல்வராஜ் அவர்கள் 29.1.2026 வியாழக்கிழமை அன்று அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருகிறோம்.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு. க.ஸ்டாலின் அவர்கள் கழக முன்னோடி சி.பி.செல்வராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கும் கழகத் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்கு பகுதி 102 (அ) வட்டத்தில் வட்டக் கழகச் செயலாளர் எம்.ஜி. ரவிக்குமார் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஆலோசனைப்படி அண்ணா நகர் வடக்குப் பகுதி கழகச் செயலாளர் ச.பரமசிவம் முன்னிலையில் 3000 நபர்களுக்கு மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் சிறப்பு பரிசுத் தொகுப்பு வழங்கினார். இதில் மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் சேரன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.